அலகு - 6
ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக தமிழகத்தில் நிகழ்ந்த தொடக்ககால கிளர்ச்சிகள்

- மூன்று கர்நாடகப் போர்களில் **பிரெஞ்சுப் படைகளையும்**, அவர்களுடன் தோழமை கொண்டிருந்த **இந்திய ஆட்சியாளர்களையும்** கிழக்கிந்திய கம்பெனி தோற்கடித்தது.
- இதன் பின்னர் கிழக்கிந்திய கம்பெனி தனது **அதிகாரத்தையும் செல்வாக்கையும்** விரிவாக்கி ஒருங்கிணைக்கத் தொடங்கியது.
- ஆனால் **உள்ளூர் ஆட்சியாளர்களும் நிலக்கிழார்களும்** இதனை எதிர்த்தனர்.
- நாட்டைப் பிடிக்கும் கம்பெனியின் நோக்கத்திற்கு **முதல் எதிர்வினை** திருநெல்வேலி பகுதியில் (தற்போதைய தென்காசி மாவட்டம்) நெற்கட்டும்செவலில் ஆட்சி புரிந்த **பூலித்தேவரிடமிருந்து** வெளிப்பட்டது.
- இதைத்தொடர்ந்து **வேலுநாச்சியார், வீரபாண்டிய கட்டபொம்மன், மருது சகோதரர்கள், தீரன் சின்னமலை** போன்றோர் தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்து எதிர்ப்பு தெரிவித்தனர்.
- இந்த எதிர்ப்புகள் **பாளையக்காரர் போர்** என அழைக்கப்படுகின்றன.
- இப்போராட்டங்கள் 1806ஆம் ஆண்டு நடந்த **வேலூர் புரட்சிக்கு** வழிவகுத்தன.
- தமிழ்நாட்டில் பிரிட்டிஷாருக்கு எதிராக உருவான இந்த **தொடக்ககால எதிர்ப்புகள்** பற்றியே இப்பாடத்தில் பார்க்கப்படுகிறது.
-

ஆங்கிலேயருக்கு எதிரான மண்டல சக்திகளின் எதிர்ப்பு

(அ) பாளையங்களும் பாளையக்காரர்களும்

- **பாளையம்** என்பது ஒரு பகுதி / இராணுவ முகாம் / சிற்றரசை குறிக்கும்; பாளையக்காரர்கள் (ஆங்கிலேயர் “Poligar”) பேரரசுக்கு கப்பம் கட்டும் குறுநில ஆட்சியாளர்கள்.
- சிறந்த இராணுவ சேவைக்காக ஒருவரின் கட்டுப்பாட்டில் பாளையம் வழங்கப்பட்டது.

- காகதீய அரசில், வாரங்கல் பிரதாபருத்ரன் காலத்தில் இம்முறை நடைமுறைப்படுத்தப்பட்டது.
- மதுரை நாயக்கர் விஸ்வநாத நாயக்கர் (1529) மற்றும் அமைச்சர் அரியநாதர் மூலம் தமிழகத்தில் அறிமுகமானது.
- பரம்பரை வழியாக சுமார் **72 பாளையக்காரர்கள்** இருந்தனர்.
- பாளையக்காரர்கள் வரிவசூல், நில நிர்வாகம், வழக்கு விசாரணை, சட்டம்-ஒழுங்கு பாதுகாப்பு ஆகியவற்றில் தன்னிச்சையாக செயல்பட்டனர்.
- அவர்களின் காவல் கடமைகள் **படிக்காவல்** மற்றும் **அரசுக்காவல்** என அழைக்கப்பட்டது.
- நாயக்க ஆட்சியாளர்கள் தங்கள் அதிகாரத்தை நிலைநிறுத்த பாளையக்காரர்களின் உதவியை பெற்றனர்.
- பாளையக்காரர்கள்-அரசர்கள் இடையேயான உறவு மதுரை நாயக்கர் காலத்தில் உருவாகி, ஆங்கிலேயர்கள் இந்நிலங்களை கைப்பற்றும் வரை இருநூறு ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்தது.

கிழக்கு மற்றும் மேற்கு பாளையங்கள்

- நாயக்க மன்னர்கள் உருவாக்கிய 72 பாளையங்களில், **கிழக்கு** மற்றும் **மேற்கு** எனப் பிரிக்கப்பட்ட பாளையங்கள் முக்கியமானவை.
- **கிழக்கு பாளையங்கள்**: சாத்தூர், நாகலாபுரம், எட்டையபுரம், பாஞ்சாலங்குறிச்சி.
- **மேற்கு பாளையங்கள்**: ஊத்துமலை, தலைவன் கோட்டை, நடுவக்குறிச்சி, சிங்கம்பட்டி, சேத்தூர்.

பாளையக்காரர்களின் புரட்சி (1755–1801)

அ) பூலித்தேவரின் புரட்சி (1755–1767)

- 1755 மார்ச் மாதம் ஆற்காடு நவாபின் சகோதரர் **மாபூஸ்கான்**, கர்னல் ஹெரான் தலைமையிலான கம்பெனி படையுடன் திருநெல்வேலிக்கு வந்தார்; மதுரை எளிதில் கைப்பற்றப்பட்டது.

- கம்பெனிக்குக் கீழ்ப்படிய மறுத்த பூலித்தேவரை அடக்க ஹெரான் அனுப்பப்பட்டார்; மேற்கு பாளையக்காரர்களிடையே பூலித்தேவருக்கு அதிக செல்வாக்கு இருந்தது.
- பீரங்கி, பொருட்கள், வீரர் ஊதியம் போன்ற பிரச்சினைகளால் ஹெரான் திட்டத்தை கைவிட்டு மதுரைக்கு பின்வாங்கினார்; பின்னர் கம்பெனி அவரை பணிநீக்கம் செய்தது.

பிரிட்டிஷ் எதிர்ப்பு கூட்டமைப்பு

- மியானா, முடிமையா, நபிகான் கட்டாக் என்ற பதானிய அதிகாரிகள் பூலித்தேவருக்கு ஆதரவளித்தனர்; அவர் அவர்களுடன் நெருக்கமான நட்புறவு கொண்டார்.
- ஆங்கிலேயர்களுக்கு எதிராக பாளையக்காரர் கூட்டமைப்பை பூலித்தேவர் உருவாக்கினார்.
- சிவகிரி தவிர பல மறவர் பாளையங்கள் ஆதரித்தன; எட்டையபுரம், பாஞ்சாலங்குறிச்சி இணையவில்லை.
- ஆங்கிலேயர்கள் இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மன்னர்களின் ஆதரவை பெற்றனர்.
- பூலித்தேவர் ஹைதர் அலி மற்றும் பிரெஞ்சர்களின் உதவியை நாடினார்; மராத்தியருடன் போரில் இருந்ததால் ஹைதர் அலி உதவ முடியவில்லை.

களக்காடு போர்

- நவாப் கூடுதல் படைகளை அனுப்பி, கம்பெனி 1000 சிப்பாய்கள் மற்றும் 600க்கும் மேற்பட்ட வீரர்களுடன் மாபூஸ்கான் படையை பலப்படுத்தினார்.
- கர்நாடக குதிரைப்படை, காலாட்படை ஆதரவும் இருந்தது; திருவிதாங்கூரின் 2000 வீரர்கள் பூலித்தேவருடன் இணைந்தனர்.
- களக்காடு போரில் மாபூஸ்கானின் படைகள் தோற்கடிக்கப்பட்டன.

யூசுப்கான் மற்றும் பூலித்தேவர் பூலித்தேவர் தலைமையிலான பாளையக்காரர் எதிர்ப்பு, திருநெல்வேலியில் ஆங்கிலேயர்கள் நேரடியாக தலையிட வழிவகுத்தது.

- 1756–1763 காலத்தில், திருவிதாங்கூர் ஆதரவுடன் திருநெல்வேலி பாளையக்காரர்கள் நவாப் அதிகாரத்தை எதிர்ப்பதே நோக்கமாக கொண்டனர்.
- கம்பெனி அனுப்பிய யூசுப்்கான் (கான்சாகிப் / மருதநாயகம்) பெரிய பீரங்கிகள், வெடிபொருட்கள் வரும்வரை தாக்குதல் நடத்தவில்லை; 1760 செப்டம்பரில் படைகள் வந்தன.
- நெற்கட்டும்செவல் கோட்டையை முற்றுகையிட்ட தாக்குதல் இரண்டு மாதங்கள் நீடித்து, 1761 மே 16 அன்று நெற்கட்டும்செவல், வாசுதேவநல்லூர், பனையூர் கோட்டைகள் யூசுப்்கான் கட்டுப்பாட்டில் சென்றன.
- பாண்டிச்சேரி கைப்பற்றப்பட்டதால் பிரெஞ்சு உதவி குறைந்தது; இதனால் பாளையக்காரர் ஒற்றுமை சிதைந்து, திருவிதாங்கூர், சேத்தூர், ஊத்துமலை, சுரண்டை எதிரணியை ஆதரித்தன.
- கம்பெனி நிர்வாகத்துக்கு தெரியாமல் பேச்சுவார்த்தை நடத்தியதாக குற்றம் சாட்டப்பட்ட யூசுப்கான் 1764ல் தூக்கிலிடப்பட்டார்.

பூலித்தேவரின் வீழ்ச்சி

- கான்சாகிப் இறந்தபின் நாடிழந்த நிலையில் இருந்த பூலித்தேவர், 1764ல் திரும்பி நெற்கட்டும்செவலை மீண்டும் கைப்பற்றினார்.
- 1767ல் கேப்டன் கெம்ப்பெல் அவரை தோற்கடித்தார்.
- தப்பிச் சென்ற பூலித்தேவர் நாடிழந்த நிலையிலேயே உயிரிழந்தார்.

ஒண்டிவீரன்

- ஒண்டிவீரன், பூலித்தேவரின் படைப்பிரிவில் ஒரு தளபதியாக இருந்தார்.
- பூலித்தேவருடன் சேர்ந்து போரிட்டு கம்பெனி படைகளுக்கு பெரிய சேதம் ஏற்படுத்தினார்.
- செவிவழிச் செய்திப்படி, ஒரு போரில் அவரது கை துண்டிக்கப்பட்டதாக கூறப்படுகிறது; இதனால் பூலித்தேவர் வருந்தினார்.
- ஆனால் ஒண்டிவீரன், எதிரி கோட்டையில் நுழைந்து பலரை வீழ்த்தியதற்கான பரிசு என இதை பெருமையாகக் கூறியுள்ளார்.

கோபால நாயக்கர் ;

கோபால நாயக்கர் விருப்பாட்சியின் பாளையக்காரராக இருந்தார்.

அவரைத் தலைவராகக் கொண்டு திண்டுக்கல் கூட்டமைப்பு (Dindigul League) அமைக்கப்பட்டது.

அந்த கூட்டமைப்பில்

மணப்பாறையின் லெட்சுமி நாயக்கர்

தேவதானப்பட்டியின் பூஜை நாயக்கர்
ஆகியோர் இடம்பெற்றனர்.

திப்பு சுல்தான் தனது நட்பை வெளிப்படுத்தும் விதமாக ஒரு நல்லுறவு குழுவை அனுப்பினார்.

அந்த நட்பு முயற்சியால் கோபால நாயக்கர் ஈர்க்கப்பட்டார்.

கோயம்புத்தூரை மையமாகக் கொண்டு அவர் பிரிட்டிஷாரை எதிர்த்து செயல்பட்டார்.

பின்னர், கட்டபொம்மனின் சகோதரரான ஊமைத்துரையுடன் இணைந்தார்.

உள்ளூர் விவசாயிகளின் ஆதரவுடன் ஆனைமலையில் கடுமையான போரில் ஈடுபட்டார்.

இறுதியில், 1801 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் படைகளால் அவர் வெற்றிகொள்ளப்பட்டார்.

(ஆ) வேலுநாச்சியார் (1730–1796

- இராமநாதபுரம் அரசர் செல்லமுத்து சேதுபதியின் ஒரே பெண் வாரிசாக 1730ல் வேலுநாச்சியார் பிறந்தார்; ஆண் வாரிசு இல்லை.
- அரச குடும்பத்தால் தற்காப்புக் கலை, போர்க்கருவி பயிற்சி பெற்றதுடன் ஆங்கிலம், பிரெஞ்சு, உருது மொழிகளில் தேர்ச்சி; குதிரையேற்றம், வில்வித்தையில் திறமை.
- 16வது வயதில் சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதரை மணந்து, வெள்ளச்சி நாச்சியார் என்ற மகளை பெற்றார்.
- 1772ல் ஆற்காடு நவாப் மற்றும் கம்பெனி படைகள் காளையார் கோவில் அரண்மனையை தாக்கியபோது முத்துவடுகநாதர் கொல்லப்பட்டார்; வேலுநாச்சியார் மகளுடன் தப்பி, கோபால நாயக்கர் பாதுகாப்பில் விருப்பாட்சியில் 8 ஆண்டுகள் வாழ்ந்தார்.
- மறைவாழ்க்கையில் படைப்பிரிவு அமைத்து, கோபால நாயக்கர் மற்றும் ஹைதர் அலியுடன் கூட்டணி ஏற்படுத்தினார்.
- தளவாய் தாண்டவராயன் மூலம் ஹைதர் அலியிடம் 5000 காலாட்படை, 5000 குதிரைப்படை உதவி கோரப்பட்டது; வேலுநாச்சியார் உருது மொழியில் கிழக்கிந்திய கம்பெனியுடன் இருந்த பிணக்குகளை கடிதத்தில் விளக்கியார்.

வேலுநாச்சியார்

- ஆங்கிலேயர்களுடன் போராடும் தனது தீவிரத்தை வேலுநாச்சியார் ஹைதர் அலிக்கு தெளிவுபடுத்தினார்; அவரின் மனவுறுதியை கண்டு ஹைதர் அலி திண்டுக்கல் கோட்டைத் தலைவன் சையதிடம் இராணுவ உதவி வழங்க உத்தரவிட்டார்.
- பிரிட்டிஷாரின் ஆயுதக் குவியல்கள் பற்றிய தகவலை அறிய வேலுநாச்சியார் உளவாளிகளை நியமித்தார்.
- கோபால நாயக்கர் மற்றும் ஹைதர் அலியின் இராணுவ உதவியுடன் சிவகங்கையை மீண்டும் கைப்பற்றினார்.
- மருது சகோதரர்கள் உதவியால் அரசியாக முடிசூட்டினார்.
- இந்தியாவில் பிரிட்டிஷ் காலனியாதிக்கத்தை எதிர்த்த **முதல் பெண் ஆட்சியாளர்** என்ற பெருமை வேலுநாச்சியாருக்குரியது.

குயிலி :

குயிலி, வேலுநாச்சியாரின் நம்பிக்கைக்குரிய தோழியாகத் திகழ்ந்தார்.

அவர் “உடையாள்” என்ற பெண்களின் படைப்பிரிவிற்கு தலைமையேற்று வழிநடத்தினார்.

“உடையாள்” என்பது, குயிலி குறித்து உளவு கூற மறுத்ததால் கொல்லப்பட்ட மேய்த்தல் தொழிலில் ஈடுபட்டிருந்த பெண்ணின் பெயர் ஆகும்

குயிலி தன்னைத்தானே நெருப்புவைத்து (1780) தீக்குளித்தார். அதே நிலையிலேயே சென்று, பிரிட்டிஷாரின் ஆயுதக்கிடங்கில் இருந்த அனைத்து தளவாடங்களையும் அழித்தார்.

(இ) வீரபாண்டிய கட்டபொம்மன் கலகம் (1790–1799

தந்தை ஜெகவீரபாண்டிய கட்டபொம்மன் இறந்தபின், 30வது வயதில் வீரபாண்டிய கட்டபொம்மன் பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரராக பொறுப்பேற்றார்.

- கம்பெனி நிர்வாகிகள் ஜேம்ஸ் லண்டன், காலின் ஜாக்சன் ஆகியோர் அவரை அமைதியை விரும்புபவராக கருதினர்; ஆனால் பின்னர் கம்பெனியுடன் மோதல் ஏற்பட்டது.
- 1781 உடன்படிக்கையின்படி, திப்பு சுல்தானுடன் நவாப் போரிட்டபோது கர்நாடகப் பகுதியில் வரி நிர்வாகம் கம்பெனி கட்டுப்பாட்டுக்குள் சென்றது.
- வசூலிக்கப்பட்ட வரியில் ஆறில் ஒரு பங்கு நவாப் குடும்பத்திற்காக ஒதுக்கப்பட்டது; பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து வரி வசூலிக்கும் உரிமை கம்பெனிக்கு கிடைத்தது.
- அனைத்து பாளையங்களிலும் வரி வசூலிக்க கம்பெனி ஆட்சியர்கள் நியமிக்கப்பட்டனர்; அவர்கள் பாளையக்காரர்களை அவமதித்து படையுடன் வரி வசூலித்தனர்.
- இதுவே கட்டபொம்மன் மற்றும் ஆங்கிலேயர்களுக்கு இடையேயான பெரிய மோதலுக்கான அடிப்படை காரணமாக அமைந்தது.

ஜாக்சனுடன் ஏற்பட்ட மோதல்

1798இல் கட்டபொம்மன் செலுத்த வேண்டிய நிலவரி நிலுவை **3310 பகோடாக்கள்** இருந்தது.

- வரி வசூலிக்க ஆட்சியர் ஜாக்சன் படை அனுப்ப முயன்றார்; ஆனால் மதராஸ் அரசு அனுமதி மறுத்தது.
- 1798 ஆகஸ்ட் 18ல் இராமநாதபுரத்தில் சந்திக்க ஜாக்சன் கட்டபொம்மனை ஆணையிட்டார்; குற்றாலம், ஸ்ரீவில்லிப்புத்தூர் போன்ற இடங்களில் சந்திப்பு நடக்கவில்லை.
- இறுதியாக 1798 செப்டம்பர் 19ல் இராமநாதபுரத்தில் சந்திப்பு நடந்தது; ஜாக்சன் கட்டபொம்மனை 3 மணி நேரம் நிற்க வைத்ததாக கூறப்படுகிறது.
- ஆபத்தை உணர்ந்த கட்டபொம்மன் அமைச்சர் சிவசுப்ரமணியனுடன் தப்ப முயன்றார்; ஊமைத்துரை உதவி செய்து கோட்டையிலிருந்து வெளியேற்றினார்.
- கோட்டை வாசலில் நடந்த மோதலில் லெப்டினெண்ட் கிளார்க் உள்ளிட்ட சிலர் கொல்லப்பட்டனர்; சிவசுப்ரமணியன் கைது செய்யப்பட்டார்.

மதராஸ் ஆட்சிக்குழுவின் முன் ஆஜராதல்

- பாஞ்சாலங்குறிச்சிக்கு திரும்பிய கட்டபொம்மன், ஜாக்சன் தன்னை அவமதித்ததை மதராஸ் ஆட்சிக்குழுவுக்கு தெரிவித்தார்.
- வில்லியம் ப்ரௌன், வில்லியம் ஓரம், ஜான் காஸாமேஜர் அடங்கிய குழுவின் முன் ஆஜராகுமாறு கட்டபொம்மனுக்கு உத்தரவு அளிக்கப்பட்டது.
- ஆளுநர் எட்வர்ட் கிளைவ், சிவசுப்ரமணியனை விடுவித்து ஜாக்சனை பணியிடைநீக்கம் செய்தார்.
- 1798 டிசம்பர் 15ல் கட்டபொம்மன் குழுவின் முன் ஆஜராகி நிகழ்வுகளை விளக்கினார்; அவர் குற்றவாளி அல்ல என்று தீர்மானிக்கப்பட்டது.
- ஜாக்சன் நிரந்தரமாக நீக்கப்பட்டு S.R. லூஷிங்டன் புதிய ஆட்சியராக நியமிக்கப்பட்டார்.

- கட்டபொம்மன் நிலுவை வரியில் 1080 பகோடாக்கள் தவிர மற்ற தொகையை செலுத்தினார்.

கட்டபொம்மன் மற்றும் பாளையக்காரர் கூட்டமைப்பு

- திண்டுக்கல் கோபால நாயக்கர், ஆனைமலை யதுல் நாயக்கர் உள்ளிட்ட பாளையங்களை இணைத்து தென்னிந்திய கூட்டமைப்பை சிவகங்கை மருதுபாண்டியர் உருவாக்கினார்; அவர் தலைவராக இருந்தார்.
- திருச்சிராப்பள்ளி அறிக்கை தயாரிக்கப்பட்டது; இது கட்டபொம்மனின் ஆர்வத்தை அதிகரித்தது.
- ஆட்சியர் லூஷிங்டன், மருது சகோதரர்களை கட்டபொம்மன் சந்திப்பதை தடுக்க முயன்றார்; ஆனால் அவர்கள் இணைந்து ஆங்கிலேயரை எதிர்க்க முடிவு செய்தனர்.
- கட்டபொம்மன் சிவகிரி பாளையக்காரரை கூட்டணியில் சேர்க்க முயன்றார்; அவர் மறுத்ததால் சிவகிரி நோக்கி முன்னேறினார்.
- சிவகிரி கம்பெனிக்கு கப்பம் கட்டியதால், இந்த நடவடிக்கையை கம்பெனி சவாலாகக் கருதி தனது படைகளை திருநெல்வேலி நோக்கி அனுப்ப உத்தரவிட்டது.

பாஞ்சாலங்குறிச்சி முற்றுகை

- 1799 மே மாதம் மதராஸ் ஆளுநர் வெல்லெஸ்லி, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை பகுதிகளில் இருந்த படைகளை திருநெல்வேலி நோக்கி அனுப்ப உத்தரவிட்டார்; மேஜர் பானெர்மென் தலைமையேற்றார்.
- திருவிதாங்கூர் படைகளும் பிரிட்டிஷ் படைகளுடன் இணைந்தன.
- 1799 செப்டம்பர் 1ல் கட்டபொம்மன் சரணடையுமாறு நிபந்தனை வழங்கப்பட்டது; அவர் மறுத்ததால் செப்டம்பர் 5ல் பானெர்மென் கோட்டையை முற்றுகையிட்டார்.
- பாஞ்சாலங்குறிச்சி கோட்டையின் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன; தூதர் இராமலிங்கர் மூலம் சரணடைய கேட்டாலும் கட்டபொம்மன் மறுத்தார்.

- இராமலிங்கர் சேகரித்த தகவல்களின் அடிப்படையில் தாக்குதல் திட்டம் அமைக்கப்பட்டது.
- கோலார்பட்டியில் நடந்த மோதலில் சிவசுப்ரமணியன் கைது செய்யப்பட்டார்.

கட்டபொம்மன் தூக்கிலிடல்

- கட்டபொம்மன் புதுக்கோட்டைக்கு தப்பிச் சென்றார்; பிரிட்டிஷார் அவரது தலைக்கு வெகுமதி அறிவித்தனர்.
- எட்டையபுரம் மற்றும் புதுக்கோட்டை அரசர்களின் துரோகத்தால் அவர் பிடிபட்டார்.
- அமைச்சர் சிவசுப்ரமணியன் 1799 செப்டம்பர் 13ல் நாகலாபுரத்தில் தூக்கிலிடப்பட்டார்.
- 1799 அக்டோபர் 16ல் பானெர்மென் நடத்திய விசாரணையில் கட்டபொம்மன் குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொண்டார்.
- திருநெல்வேலி அருகிலுள்ள கயத்தாறில் பழைய கோட்டை முன் புளியமரத்தில், பிற பாளையக்காரர்கள் முன்னிலையில் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டார்.
- பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரரான கட்டபொம்மனின் வாழ்க்கை இவ்வாறு முடிவுற்றது; அவரைப் புகழ்ந்த நாட்டுப்புறப் பாடல்கள் அவரது நினைவுகளை மக்களிடையே உயிர்ப்புடன் வைத்திருக்கின்றன.

(ஈ) மருது சகோதரர்கள்

- பெரிய மருது (வெள்ளை மருது, 1748–1801) மற்றும் சின்ன மருது (1753–1801) சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதரின் திறமையான படைத்தளபதிகள்.
- காளையார் கோவில் போரில் மன்னர் இறந்தபின், வேலுநாச்சியாருக்கு அரசுரிமையை மீட்டுக் கொடுக்க முக்கிய பங்கு வகித்தனர்.
- 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் பிரிட்டிஷாரை எதிர்க்க திட்டமிட்டனர்.
- கட்டபொம்மன் இறந்தபின் அவரது சகோதரர் ஊமைத்துரையுடன் இணைந்து செயல்பட்டனர்.

- நவாப் களஞ்சியங்களை கொள்ளையிட்டு, கம்பெனி படைகளுக்கு பெரும் சேதமும் அழிவும் ஏற்படுத்தினர்.

மருது சகோதரர்களின் கலகம் (1800–1801)

- 1799ல் கட்டபொம்மன் கலகம் ஒடுக்கப்பட்டபோதும், 1800ல் மீண்டும் கிளர்ச்சி வெடித்தது; இது **இரண்டாவது பாளையக்காரர் போர்** என பிரிட்டிஷ் குறிப்புகளில் அழைக்கப்பட்டது.
- சிவகங்கை மருதுபாண்டியர், திண்டுக்கல் கோபால நாயக்கர், மலபார் கேரள வர்மா, மைசூர் கிருஷ்ணப்பா, தூண்டாஜி ஆகியோர் கூட்டமைப்பை வழிநடத்தினர்.
- ஏப்ரல் 1800 விருப்பாட்சியில் சந்தித்து கம்பெனிக்கு எதிராக கிளர்ச்சி தீர்மானிக்கப்பட்டது; ஜூன் 1800 கோயம்புத்தூர் எழுச்சி இராமநாதபுரம், மதுரை வரை பரவியது.
- கம்பெனி எதிர்ப்பாளர்களுக்கு போர் அறிவித்து, கோயம்புத்தூர், சத்தியமங்கலம், தாராபுரம் பாளையக்காரர்கள் கைது செய்து தூக்கிலிட்டது.
- ஊமைத்துரை, செவத்தையா சிறையிலிருந்து தப்பி சின்ன மருதுவின் சிறுவயல் தலைமையிடம் சேர்க்கப்பட்டனர்; பாஞ்சாலங்குறிச்சி கோட்டை மீண்டும் கட்டப்பட்டது.
- காலின் மெக்காலே தலைமையிலான படைகள் கோட்டையை முற்றுகையிட்டதால் அவர்கள் சிவகங்கையில் அடைக்கலம் தேடினர்; ஒப்படைக்குமாறு கூறியபோதும் மருது சகோதரர்கள் மறுத்தனர்.
- கர்னல் அக்னியூ, கர்னல் இந்நஸ் படையெடுத்து வந்தனர்; 1801 ஜூனில் மருது சகோதரர்கள் வெளியிட்ட விடுதலைப் பிரகடனம் **“திருச்சிராப்பள்ளி பேரறிக்கை”** என அழைக்கப்படுகிறது.

1801ஆம் ஆண்டு பேரறிக்கை (திருச்சிராப்பள்ளி பேரறிக்கை) –

- மண்டல, சாதி, சமயம், இன வேறுபாடுகளை கடந்து பிரிட்டிஷாருக்கு எதிராக ஒன்றுபட அழைத்த முதல் அறைகூவல் **1801 பேரறிக்கை** ஆகும்.
- இந்த பேரறிக்கை திருச்சி நவாப் கோட்டை முன்சுவர் மற்றும் ஸ்ரீரங்கம் கோவில் சுற்றுச்சுவரில் ஒட்டப்பட்டது.

- ஆங்கிலேயரை எதிர்க்க பல தமிழக பாளையக்காரர்கள் ஒன்றிணைந்தனர்; சின்ன மருது சுமார் **20,000 வீரர்களை** திரட்டினார்.
- வங்காளம், சிலோன், மலேயா பகுதிகளில் இருந்த பிரிட்டிஷ் படைகள் விரைந்து கொண்டு வரப்பட்டன.
- புதுக்கோட்டை, எட்டையபுரம், தஞ்சாவூர் அரசர்கள் பிரிட்டிஷாருடன் சேர்ந்தனர்.
- ஆங்கிலேயர்களின் **பிரித்து ஆளும் கொள்கை** பாளையக்காரர் படைகளில் பிளவை ஏற்படுத்தியது.

சிவகங்கை வீழ்ச்சி & தீரன் சின்னமலை

சிவகங்கை வீழ்ச்சி (1801)

- 1801 மே மாதம் தஞ்சாவூர், திருச்சி பகுதிகளில் இருந்த கிளர்ச்சியாளர்களை ஆங்கிலேயர்கள் தாக்கினர்; பிரான்மலை, காளையார் கோவில் பகுதிகளில் மீண்டும் தோற்கடித்தனர்.
- வலுவான படை மற்றும் தலைமையால் ஆங்கிலேயர்கள் வெற்றி பெற்றனர்; 1801ல் சிவகங்கை இணைக்கப்பட்டது.
- 1801 அக்டோபர் 24ல் திருப்பத்தூர் கோட்டையில் மருது சகோதரர்கள் தூக்கிலிடப்பட்டனர்.
- ஊமைத்துரை, செவத்தையா 1801 நவம்பர் 16ல் பாஞ்சாலங்குறிச்சியில் தலை துண்டிக்கப்பட்டனர்; 73 கிளர்ச்சியாளர்கள் பினாங்கிற்கு நாடுகடத்தப்பட்டனர்.
- மருது சகோதரர்கள் கலகம் “தென்னிந்தியப் புரட்சி” என அழைக்கப்பட்டு, வீரத் தியாகத்தின் எடுத்துக்காட்டாக கருதப்படுகிறது.

கர்நாடக உடன்படிக்கை, 1801

- பாளையக்காரர் கலகங்கள் அடக்கப்பட்டதால் உள்ளூர் தலைவர்களின் சக்தி குறைந்தது.
- 1801 ஜூலை 31 கர்நாடக உடன்படிக்கையால் பிரிட்டிஷார் தமிழகத்தில் நேரடி கட்டுப்பாடு ஏற்படுத்தினர்; பாளையக்காரர் முறை முடிவுக்கு வந்தது; கோட்டைகள் இடிக்கப்பட்டு படைகள் கலைக்கப்பட்டன.

(உ) தீரன் சின்னமலை (1756–1805)

- தீர்த்தகிரி எனப் பிறந்தவர்; சிலம்பம், வில்வித்தை, குதிரையேற்றம் மற்றும் நவீன போர் முறைகளில் தேர்ச்சி.
- மைசூர் சுல்தானின் திவான் முகம்மது அலியிடமிருந்து வரிப்பணம் பறித்த சம்பவத்தால் “தீரன் சின்னமலை” என அழைக்கப்பட்டார்; நொய்யல் ஆற்றங்கரையில் வெற்றி பெற்றார்.
- திப்புவின் இறப்புக்குப் பிறகு கோட்டை அமைத்து ‘ஓடாநிலை’யில் இருந்து ஆங்கிலேயரை எதிர்த்து கொரில்லா போர் முறையில் போராடினார்.
- இறுதியில் பிடிபட்டு சங்ககிரி கோட்டையில் சிறை வைக்கப்பட்டு, ஆங்கிலேய ஆட்சியை ஏற்க மறுத்ததால் **1805 ஜூலை 31** அன்று தூக்கிலிடப்பட்டார்.

வேலூர் புரட்சி – 1806

- 1792 திப்பு சுல்தானுடன் நடந்த போருக்குப் பின், சேலம் மற்றும் திண்டுக்கல் வருவாய் மாவட்டங்கள் கிழக்கிந்திய கம்பெனிக்கு கிடைத்தன.
- 1799 ஆங்கிலேய–மைசூர் போருக்குப் பின் கோயம்புத்தூர் இணைக்கப்பட்டது.
- 1798ல் தஞ்சாவூர் மன்னர் இறையாண்மை உரிமையை ஆங்கிலேயருக்கு ஒப்படைத்து, கப்பம் கட்டும் நிலைக்கு தள்ளப்பட்டார்.
- கட்டபொம்மன் (1799), மருது சகோதரர்கள் (1801) எதிர்ப்புகள் ஒடுக்கப்பட்டபின், ஆங்கிலேயர்கள் ஆற்காடு நவாபை விசுவாசமற்றவர் என குற்றம் சாட்டினர்.
- 1801 ஒப்பந்தத்தின்படி வட ஆற்காடு, தென் ஆற்காடு, திருச்சி, மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களின் நிர்வாக அதிகாரம் ஆங்கிலேயரிடம் ஒப்படைக்கப்பட்டது.

(அ) இந்திய வீரர்களின் மனக்குறை – வேலூர் புரட்சி (1806) –

- சிற்றரசர்கள், நிலச்சுவாந்ததார்கள் எதிர்ப்புத் திட்டங்களை சிந்தித்ததின் விளைவாக **1806 வேலூர் புரட்சி** உருவானது; நோக்கம் அந்நிய ஆட்சியை அகற்றுவது.
- பிரிட்டிஷ் இராணுவத்தில் இந்திய சிப்பாய்களுக்கு குறைந்த ஊதியம், பதவி உயர்வு வாய்ப்பு குறைவு ஆகியவை அதிருப்தியை அதிகரித்தது.
- சமூக, சமய நம்பிக்கைகளுக்கு ஆங்கிலேயர்கள் மதிப்பு அளிக்காததும், விவசாய பின்னணி வீரர்களின் பொருளாதார சிக்கல்களும் கோபத்தை அதிகரித்தன.
- நிலக்குத்தகை முறை மாற்றம், 1805 பஞ்சம் ஆகிய காரணங்களால் சிப்பாய்களின் குடும்பங்கள் கடும் நெருக்கடி சந்தித்தன.
- திப்புவின் மகன்கள் வேலூர் கோட்டையில் சிறை வைக்கப்பட்டிருந்த சூழலில் அதிருப்தி மேலும் உயர்ந்தது.
- தலைமையத் தளபதி சர் ஜான் கிரடாக் வெளியிட்ட புதிய இராணுவ விதிமுறைகள் புரட்சிக்கான முக்கிய காரணமாக அமைந்தது.
- புதிய விதிகள்: சீருடையில் சாதி அடையாளம், காதணி அணிய தடை; தாடி முழுவதும் கீறி, மீசையை ஒரே பாணியில் வைத்தல் கட்டாயம்.
- விலங்கு தோல் இலட்சினை கொண்ட புதிய தலைப்பாகை அறிமுகம் சிப்பாய்களுக்கு எதிர்ப்பை ஏற்படுத்தியது; எச்சரிக்கை இருந்தும் கம்பெனி நிர்வாகம் கவனிக்கவில்லை.

(ஆ) புரட்சி வெடித்தல் – வேலூர் புரட்சி 1806

- 1806 ஜூலை 10 அதிகாலை, முதல் மற்றும் 23வது படைப்பிரிவுகளின் இந்திய சிப்பாய்கள் துப்பாக்கிச் சூட்டுடன் புரட்சியை தொடங்கினர்.
- கோட்டை காவற்படைத் தலைவர் கர்னல் பேன் கோர்ட் முதல் பலியாகினார்; கர்னல் மீக்காரஸ் மற்றும் மேஜர் ஆர்ம்ஸ்ட்ராங் உள்ளிட்ட பல அதிகாரிகள் கொல்லப்பட்டனர்.
- ஒரு மணி நேரத்தில் பன்னிரண்டுக்கும் மேற்பட்ட அதிகாரிகள் உயிரிழந்தனர்; லெப்டினெண்ட் எல்லி, லெப்டினெண்ட் பாப்ஹாம் ஆகியோரும் இதில் அடங்குவர்.

ஜில்லஸ்பியின் கொடுங்கோன்மை

- மேஜர் கூட்ஸ் தகவல் கொடுத்ததால், கர்னல் ஜில்லஸ்பி கேப்டன் யங் தலைமையிலான குதிரைப்படையுடன் காலை 9 மணிக்கு கோட்டையை வந்தடைந்தார்.
- புரட்சியாளர்கள் திப்புவின் மகன் ஃபதே ஹைதரை மன்னராக அறிவித்து, மைசூர் சுல்தானின் புலிக்கொடியை ஏற்றினர்.
- ஜில்லஸ்பி கடுமையாக புரட்சியை ஒடுக்கினார்; கோட்டையில் மட்டும் சுமார் **800 வீரர்கள்** உயிரிழந்ததாக பதிவு.
- திருச்சி, வேலூரில் சுமார் **600 வீரர்கள்** கைது செய்யப்பட்டு விசாரணைக்காக சிறையில் அடைக்கப்பட்டனர்.

(இ) புரட்சியின் பின்விளைவுகள் – வேலூர் புரட்சி 1806

- நீதிமன்ற விசாரணைக்குப் பின் 6 பேர் பீரங்கியில் கட்டி சுட்டுக் கொல்லப்பட்டனர்; 5 பேர் துப்பாக்கியால் சுட்டும், 8 பேர் தூக்கிலிட்டும் கொல்லப்பட்டனர்.
- திப்புவின் மகன்கள் கல்கத்தாவுக்கு அனுப்பப்பட்டனர்.
- கலவரத்தை அடக்கிய அதிகாரிகளுக்கு பரிசுத்தொகையும் பதவி உயர்வும் வழங்கப்பட்டது; கர்னல் ஜில்லஸ்பிக்கு **7000 பகோடாக்கள்** வெகுமதி கிடைத்தது.
- புரட்சிக்குக் காரணம் எனக் கருதப்பட்ட தலைமையத் தளபதி ஜான் கிரடாக், உதவித் தளபதி அக்னியூ, ஆளுநர் வில்லியம்

பெண்டிங் ஆகியோர் பணிநீக்கம் செய்யப்பட்டு இங்கிலாந்து திரும்ப அழைக்கப்பட்டனர்.

- புதிய இராணுவ விதிமுறைகள் திரும்பப் பெறப்பட்டன.

(ஈ) புரட்சியைப் பற்றிய மதிப்பீடு – வேலூர் புரட்சி 1806

- வெளியில் இருந்து உடனடி உதவி இல்லாததால் வேலூர் புரட்சி தோல்வியடைந்தது.
- புரட்சித் திட்டங்களை 23ஆம் படைப்பிரிவு மற்றும் 1ஆம் படைப்பிரிவின் சுபேதார்கள், ஜமேதார்கள் (ஷேக் ஆடம், ஷேக் ஹமீத், ஷேக் ஹுசைன், ஷேக் காஸிம் உள்ளிட்டோர்) திட்டமிட்டனர்.
- 1857 பெரிய கலகத்தின் முன்அறிகுறிகள் மற்றும் எச்சரிக்கைகளை வேலூர் புரட்சி கொண்டிருந்தது.
- முக்கிய வித்தியாசம்: இதனைத் தொடர்ந்து பெரிய உள்நாட்டு கிளர்ச்சி உருவாகவில்லை.
- 1806 புரட்சி வேலூர் கோட்டையிலேயே முடிவடையாமல் பெல்லாரி, வாலாஜாபாத், ஹைதராபாத், பெங்களூரு, நந்திதுர்கம், சங்கரிதுர்கம் போன்ற இடங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது.